ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 1.7 – அங்கண் ஞாலம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.7 – அங்கண் ஞாலம்

‡ அங்கண் ஞாலம் அஞ்ச ⋆
அங்கோர் ஆள் அரி ஆய் ⋆
அவுணன் பொங்க ஆகம் வள் உகிரால் ⋆
போழ்ந்த புனிதன் இடம் ⋆
பைங்கண் ஆனைக் கொம்பு கொண்டு ⋆
பத்திமையால் ⋆
அடிக் கீழ்ச் செங்கண் ஆளி இட்டிறைஞ்சும் ⋆
சிங்கவேள் குன்றமே ‖ **1.7.1** ‖

அலைத்த பேழ்வாய் ⋆
வாள் எயிற்றோர் கோள் அரி ஆய் ⋆
அவுணன் கொலைக் கையாளன் நெஞ்சிடந்த ⋆
கூர் உகிராளன் இடம் ⋆
மலைத்த செல் சாத்தெறிந்த பூசல் ⋆
வன் துடிவாய் கடுப்ப ⋆
சிலைக் கை வேடர் தெழிப்பறாத ⋆
சிங்கவேள் குன்றமே ‖ **1.7.2** ‖

ஏய்ந்த பேழ்வாய் ⋆
வாள் எயிற்றோர் கோள் அரி ஆய் ⋆
அவுணன் வாய்ந்த ஆகம் வள் உகிரால் ⋆
வகிர்ந்த அம்மானதிடம் ⋆
ஓய்ந்த மாவும் உடைந்த குன்றும் ⋆

அன்றியும் நின்றழலால் ⋆
தேய்ந்த வேயும் அல்லதில்லாச் ⋆
சிங்கவேள் குன்றமே ‖ **1.7.3** ‖

எவ்வும் வெவ்வேல் பொன் பெயரோன் ⋆
ஏதலன் இன் உயிரை வவ்வி ⋆
ஆகம் வள் உகிரால் ⋆
வகிர்ந்த அம்மானதிடம் ⋆
கவ்வு நாயும் கழுகும் ⋆
உச்சிப்போதொடு கால் சுழன்று ⋆
தெய்வம் அல்லால் செல்ல ஒண்ணாச் ⋆
சிங்கவேள் குன்றமே ‖ **1.7.4** ‖

மென்ற பேழ்வாய் ⋆
வாள் எயிற்றோர் கோள் அரி ஆய் ⋆
அவுணன் பொன்ற ஆகம் வள் உகிரால் ⋆
போழ்ந்த புனிதன் இடம் ⋆
நின்ற செந்தீ மொண்டு சூறை ⋆
நீள் விசும்பூடிரிய ⋆
சென்று காண்டற்கரிய கோயில் ⋆
சிங்கவேள் குன்றமே ‖ **1.7.5** ‖

எரிந்த பைங்கண் இலங்கு பேழ்வாய் ⋆
எயிற்றொடிதெவ்வுரு என்று ⋆
இரிந்து வானோர் கலங்கி ஓட ⋆
இருந்த அம்மானதிடம் ⋆
நெரிந்த வேயின் முழையுள் நின்று ⋆
நீள் நெறிவாய் உழுவை ⋆

திரிந்த ஆனைச் சுவடு பார்க்கும் ⋆
சிங்கவேள் குன்றமே ‖ **1.7.6** ‖

முனைத்த சீற்றம் விண் சுடப் போய் ⋆
மூ உலகும் பிறவும் ⋆
அனைத்தும் அஞ்ச ஆள் அரி ஆய் ⋆
இருந்த அம்மானதிடம் ⋆
கனைத்த தீயும் கல்லும் அல்லா ⋆
வில் உடை வேடரும் ஆய்த் ⋆
தினைத்தனையும் செல்ல ஒண்ணாச் ⋆
சிங்கவேள் குன்றமே ‖ **1.7.7** ‖

நாத்தழும்ப நான் முகனும் ⋆
ஈசனுமாய் முறையால் ஏத்த ⋆
அங்கோர் ஆள் அரி ஆய் ⋆
இருந்த அம்மானதிடம் ⋆
காய்த்த வாகை நெற்றொலிப்பக் ⋆
கல் அதர் வேய்ங்கழை போய்த் ⋆
தேய்த்த தீயால் விண் சிவக்கும் ⋆
சிங்கவேள் குன்றமே ‖ **1.7.8** ‖

நல்லை நெஞ்சே ! நாம் தொழுதும் ⋆
நம்முடை நம் பெருமான் ⋆
அல்லி மாதர் புல்க நின்ற ⋆
ஆயிரம் தோளன் இடம் ⋆
நெல்லி மல்கிக் கல் உடைப்பப் ⋆
புல் இலை ஆர்த்து ⋆

அதர் வாய்ச் சில்லி சில் என்றொல் அறாத ⋆
சிங்கவேள் குன்றமே ॥ **1.7.9** ॥

‡ செங்கண் ஆளி இட்டிறைஞ்சும் ⋆
சிங்கவேள் குன்றுடைய ⋆
எங்கள் ஈசன் எம் பிரானை ⋆
இரும் தமிழ் நூற் புலவன் ⋆
மங்கை யாளன் மன்னு தொல் சீர் ⋆
வண்டறை தார்க் கலியன் ⋆
செங்கை ஆளன் செஞ்சொல் மாலை ⋆
வல்லவர் தீதிலரே ॥ **1.7.10** ॥

அடிவரவு — அங்கண் அலைத்த ஏய்ந்த எவ்வம் மென்ற எரிந்த முனைத்த நா நல்லை செங்கண் கொங்கு

அங்கண் ஞாலம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்